Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | | |
|---|---|---|
| இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி: எண்

மலர் 6 ... பக்கம் ... மாசி 28 ... ஷவ்வால் 25 (11 3 64) புதன்கிழமை இதழ் 30

# சிரேஷ்ட மாணவருக்கு கட்டாய வேலை

## அரசாங்க, தனியார்துறையில் வேலைக்கமர்த்தப்படுவர்

### கல்விமந்திரியின் புதிய திட்டம் விரைவில் அமுலாகும்

கொழும்பு, செவ்வாய்

**பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் கல்விபயிலும் சிரேஷ்ட மாணவர்கள் தங்களது பாடசாலை வாழ்க்கையிலேயே பல்வேறு தொழில்துறைகளிலும் அனுபவம் பெறும்பொருட்டு கல்வி அமைச்சர் திரு. பி. பி. ஜி. கலுகல்லை புதிய திட்டமொன்றைத் தயாரித்துள்ளார். இத் திட்டத்தின்கீழ், கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் கல்விபயிலும் ஜி. ஸி. ஈ மாணவர்கள், 'வேலை அனுபவத்தில்' போதிய தேர்ச்சிபடையும்பொருட்டு அரசாங்க, தனிப்பட்ட அபிவிருத்தித்திட்டங்களிலும், அரசாங்க, தனிப்பட்ட ஆஸ்பத்திரிகளிலும் வேலை செய்யக் கட்டாயப்படுத்தப்படுவார்கள்.**

கல்விமந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லை நேற்று கல்வி இலாகாவின் ஆராய்ச்சிக் குழுவொன்றை நியமித்துள்ளார். கல்விசம்பந்தமான வெள்ளையறிக்கையில் முன்னோடியாகக் காணப்படும் மாற்றங்களை அமுல்செய்வதே இக்குழுவின் பிரதான வேலையாகவிருக்கும். இதுதவிர பாடசாலைகளில் கொண்டுவரப்பட்டுள்ள பாடத்திட்டங்கள் குறித்து ஆராய்ந்து அதன் மாற்றங்களின் அவசியம்பற்றி கல்வி டைரக்டருக்கு சிபார்சுசெய்யவும் இக் குழுவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் 'வேலை அனுபவங்களில்' போதிய பயிற்சி பெறும்பொருட்டு அரசாங்க, தனிப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் அவர்களை வேலை செய்யவிடுவது சம்பந்தமாகவும் இக்குழு ஆராயும்.

கல்வி இலாகாவைச் சேர்ந்த அதிகாரிபொருவர் இது சம்பந்தமாகத் தெரிவிக்கையில் புதிய திட்டத்தின் கீழ் ஜி. ஸி. ஈ (சாதாரணம்) வகுப்பிலும் அதற்கு மேற்பட்ட வகுப்பிலும் கல்விபயிலும் சகல மாணவர்களும் விவசாய, கைத்தொழில், வர்த்தக திட்டங்களில் (அரசாங்கம், தனிப்பட்ட) இரண்டு வாரகாலத்துக்கு வேலைசெய்ய கட்டாயப்படுத்தப்படுவார்கள். என்றும் கல்வி டைரக்டரினால் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க, தனிப்பட்ட ஆஸ்பத்திரிகளில் வேலைபார்க்கவும் மாணவர்கள் அனுப்பப்படுவார்கள் என்றும் கூறினர்.

இத்திட்டம் விரைவில் அமுலாகுமெனத் தெரியவருகிறது.

---

## சட்டவிரோதக்காரரென குருநகர் வாசிகள் கைது!

### மீனவர்கள் மத்தியில் அச்சம்

யாழ்ப்பாணம், புதன்

பூநகரியிலுள்ள கிராஞ்சிக்குடாவிற்கு மீன் பிடிப்பதற்காக ஆயந்திர படகில் சென்ற 3 குருநகர் வாசிகளை சட்டவிரோதக் குடியேற்றக்காரரெனக் கூறி கடற்படையினர் கைதுசெய்ததைத் தொடர்ந்து மீன்பிடியாளர்கள் மத்தியில் மிகுந்த அச்சமும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது. இதனால் பூநகரியை சுற்றியுள்ள பகுதிக்கு மீன்பிடிக்கச் செல்ல குருநகர் வாசிகள் பயப்படுகிறார்கள்.

கடந்த சனிக்கிழமை மாலை, குருநகரைச் சேர்ந்த ஞானேந்திரம், பிரான்ஸ் ஜேம்ஸ், மகேந்திரன் ஆகியோர் இயந்திரப் படகில் மீன்பிடிக்கச் சென்றார்களென்றும், மகேந்திரனை, முன்னிக்சளத்தில் இறக்கி விட்டுச் சென்ற பொழுது, வேரவில் "காவலை" சேர்ந்த கடற்படையினர் அவரை கைதுசெய்தனரென்றும் அறியப்படுகிறது. இதன் பின்னர் கிராஞ்சிக்குடாவில் ஞானேந்திரம், பி. ஜேம்ஸ் ஆகியோரையும் கடற்படையினர் கைதுசெய்து, மறுநாள் காலை 11 மணிக்கு கிளிநொச்சி பொலிசாரிடம் ஒப்படைத்தார்களென்றும் தெரிய வருகிறது.

இம்மூவரின் பங்கீட்டரிசிப் புத்தகங்களும், மற்றும் விபரங்களும் கிடைத்த பின்பே, கிளிநொச்சி பொலிசார் அன்று மாலை 5 மணிக்கு விடுதலை செய்தார்கள் என்றும் தெரிய வருகிறது.

---

## 'நாவலர் பாடசாலையை மூடும்படி சிபார்சுசெய்யவில்லை'

### சைவபரிபாலன சபைக்கு டாக்டர் நாகநாதன் பதில்

கொழும்பு, செவ்வாய்

**வண்ணை நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையை மூடிவிடுமாறு தான் கல்வி அதிகாரிகளை ஒருபோதும் கோரவில்லையென்றும் தமது சிபார்சுகள் தவருகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளன வென்றும் நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதன் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக் காரியதரிசிக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.**

டாக்டர் நாகநாதனுக்கு மேற்படி சபைக் காரியதரிசி அனுப்பிய கடிதத்திற்குப் பதிலளிக்குமுகமாக அனுப்பிய கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

சைவபரிபாலன சபைக் காரியதரிசி தமது சபை 16-2-64 ல் ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானம் பற்றித் தெரிவித்திருந்தார். அத்தீர்மானத்தில்தற்போது காவலர் பாடசாலை அமைந்திருக்கும் இடமான வண்ணார்பண்ணையில் வசிக்கும் 95 சத விகிதமானவர்கள் இந்துசமய சார்புளவர்களென்றும் இப்பாடசாலை ஓ டுமடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டால் யாழ்ப்பாணத்திலுள்ள இந்துக்களின் மனதைப் புண்படுத்துவதாக இருக்குமென்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட பாடசாலை இந்துசமய சீர்திருத்தப் பெரியார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் ஸ்தாபிக்கப்பட்டதென்றும் அவ்வரை இப்பாடசாலை ஞாபகப்படுத்திக் கொண்டிருப்பதாகவும் தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

(5-ம் பக்கம் பார்க்க)

---

ஜம்முவுக்குத் தெற்கே

## பாக்-இந்திய துருப்புகள் துப்பாக்கிப் பிரயோகம்

### இரு தரப்பிலும் பலர் மாண்டனர்

ஸ்ரீநகர், மார்ச் 10

ஜம்முவிலிருந்து தெற்கே இருபது மைல் தூரத்தில் பாகிஸ்தான் இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகம் தொடர்ந்து நடைபெற்று வருவதாக இந்திய பாதுகாப்பு மந்திரி சாவன் தெரிவித்துள்ளார்.

லோகசபையில் இன்று அங்கத்தவர் ஒருவரின் அவசரக் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் தான் திரு. சாவன் மேற்கண்டவாறு கூறினர்.

கடந்த வியாழக்கிழமை முதல் பாகிஸ்தான் இராணுவத்தினர் இப்பகுதியில் விட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றனர். 5, 6, 7-ம் திகதிகளில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தினால் இந்தியர்கள் சிலர் உயிரிழந்தனர். நேற்று நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இந்தியர் இருவர் பலியானர்கள். தற்பாதுகாப்புக்காக இந்திய துருப்புகளும் திருப்பிச் சுட்டனர். பாகிஸ்தான் தரப்பிலும் உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது. ஆனால் மதிப்புத் தெரியவில்லை. இப்பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் தொடர்ந்து நடைபெற்ற பொழுதிலும் பாதுகாப்பு வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்றும் திரு. சாவன் கூறினர்.

---

## இலங்கையிலிருந்து திரும்பும் 'அகதிகள்'

### உதவி செய்யாமைக்கு ராஜ்ய சபையில் கண்டனம்

புதுடில்லி, மார்ச் 10

இன்று டில்லி ராஜ்ய சபையில் இந்திய வரவு செலவுத் திட்டம் பற்றி நடந்த விவாதத்தில் இலங்கையிலிருந்து தாய்நாடு திரும்பும் இந்திய 'அகதிகளுக்கு' உதவியளிக்க எவ்வித ஏற்பாட்டையும் செய்யாததை, திரு. ஜே. சிவசண்முகம்பிள்ளை கண்டித்தார்.

---

## வெடிகுண்டுசம்பவம்

### காவலாளியை பொலிஸார் தேடுகின்றனர்

கொழும்பு, செவ்வாய்

யூனியன் பிளேஸிலுள்ள இலங்கை தொழிற்சங்க சம்மேளன கட்டடத்தில் நேற்று வெடித்த வெடிகுண்டு சம்பந்தமாக விசாரிக்கும்பொருட்டு இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைமைக் காரியாலய காவலாளி காசிம் என்பவரை குற்றவியல் பொலிஸார் தேடிவருகின்றனர்.

---

### லண்டன் செல்வார்

கொழும்பு, செவ்வாய்

காமன்வெல்த் நாடுகளின் வர்த்தக மந்திரிகள் மகாநாட்டில் கலந்துகொள்ளும்பொருட்டு வர்த்தக மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயகா ஞாயிற்றுக்கிழமை லண்டன் செல்வார்.

---

### இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம் மூன்றாவது திருவிழா மாலை ஆறு மணிக்கு திரு. இ. திருநாவுக்கரசு "சிவராத்திரி மகிமை" எனும் பொருள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார்.

---

## 'என்ஜின் சாரதியின் தவறல்ல'

### விசாரணை நடத்துமாறு செனட்டர் சந்திரா கோரிக்கை

கொழும்பு, செவ்வாய்

சீனப்பிரதமர் இலங்கையில் இருந்தசமயத்தில் அவர் ஹொரவப்பொத்தானைக்குச் செல்லும் வழியில் அருகே நேரிடவிருந்த ரயில் விபத்து சம்பந்தமாக காரணமாகவிருந்தது எனக் கூறி வேலை நீக்கம் செய்யப்பட்ட ரயில் என்ஜின் சாரதி குறித்து விசாரணை எதுவும் நடைபெறவில்லை என்றும் இது என்ஜின் சாரதியின் தவறல்ல ஆனால் கட்டுப்பாட்டு அறையில் நிற வெளிச்சம் காட்டுபவராகக் கடமையாற்றியவரே இதற்குப் பொறுப்பாகும் எனறும் இன்று செனட் சபையில் திரு சந்திரா குணசேகரா பேசுகையில் தெரிவித்தார்.

"உண்மை விபரத்தை எல்லா பத்திரிகைகளும் வெளி

(6-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

உன்னுடைய முக்கியம் பற்றி மிகைப்பட்ட எண்ணங்களைக் கொள்ளவேண்டாம். எல்லாம் இறைவன் தந்தது என்ற நம்பிக்கையுடன் உன்னைப் பற்றி நீயே நல்லறிவுடன் எடை போட்டுக்கொள்.

— ரோமான்ஸ்

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு
மாசி மீ 28 உ. (11-3-64)

## கிராம சபைத் தேர்தல்

ஒற்றுமையும், அமைதியும நிலவும் கிராமங்களிலே, தேர்தல் போட்டி காரணமாக, கோஷ்டிச் சண்டைகளும், வேற்றுமைகளும் ஏற்படுவதாயும், தலைவராகத் தெரிவுசெய்யப்படுபவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொணர்ந்து அவரை வீழ்த்துவதே மற்றவர்களுக்கு முக்கிய வேலையாக இருப்பதாயும், தேர்தல்களுக்கு முன் அளிக்கப்பட்ட வாககுறுதியை மறந்து, மெம்பர்கள் தங்கள் சொந்த நலனையே கவனிப்பதாகவும், இதனால் கிராமத்தின் பொதுவாழ்வே மோசமாகி, கிராமம் சீரழிவதாயும் ஒரன்பர் எழுதியுள்ள நீண்ட கடிதத்தில் குறிப்பிடுள்ளார். பல கிராம சபைகளுக்கும் புதிய தேர்தல்கள் நடைபெறவிருக்கும் இச்சமயத்தில் இதுபற்றி அபேட்சகர்கள் உள்ளிட்டு, பொதுமக்கள் அனைவரும் நிதானமாகச் சிந்திக்கவேண்டியது மிக அவசியமாகின்றது.

ஜனநாயக முறையின் படி மக்களின் ஆதரவைப் பெற்ற பிரதிநிதிகள் நிர்வாகத்தை நடத்துவதால், மக்களின் நன்மை காக்கப்படுமென்பதே நம்பிக்கை. இந்த நம்பிக்கை நிறைவேறி ஜனநாயகம் வெற்றிபெற வேண்டுமாயின் சுயநல நோக்கங்களோ, பதவிப்பித்தோ இல்லாதவர்களும், தியாக புத்தியுள்ளவர்களும, திறமைசாலிகளும், நற்குணமும் நற்பண்புமுள்ளவர்களுமே தெரிவுசெய்யப்பட வேண்டும். ஆனல் தேர்தல்களில் குடி, லஞ்சம் முதலியன புகுந்துவிடுமாயின் இத்தேர்தலின் புனிதமே கெட்டு, முடிவில் கிராமமே பாழாக ஏதுவாகின்றது.

ஆகவே கிராமத்தின் மேலான நன்மையைக் காத்துக்கொள்வது இப்போது கிராம மக்களின் கையில்தான் பெருவாகவுள்ளது. ஜாதி, மதம், கட்சி, பணம் முதலியவற்றைக் கவனிக்காமல், நற்குணமும், நற்பண்புமுள்ளவர்களையே தெரிவுசெய்வதென்று மக்கள் உறுதிகொள்ளவேண்டும் வேறு தயவுதாட்சண்யங்கள் எதுவும் பாராமல், அபேட்சகரின் தகுதியை மட்டும் சீர்தூக்கிப் பார்த்துத் தங்கள் வாக்குரிமையை மக்கள் வழங்குவதாயின், கிராமத்துக்கும், தங்களுக்கும் நன்மை செய்துகொண்டவர்களாவர்.

கிராமசபை முதல் பார்லிமெண்ட்சபை வரையிலான தேர்தல்களுக்கு நிற்பவர்கள் கூடுமானவரை, தங்கள் பூரண நேரத்தையும் பொது நன்மைக்காகப் பயன்படுத்தக்கூடியவர்களாக இருப்பது நன்று. பல தொழில்களிலும் ஈடுபட்டவர்கள், பொதுமக்களுக்குப் பூரணமாக உழைக்கமுடியாது போகலாம். இவை வெறும் கௌரவப் பதவிகளல்ல. பொதுமக்களுக்குத் தியாகசேவை செய்து, அதன்மூலம் இன்பம் பெறுவதற்கு வாய்ப்புக் கிடைக்குமென்ற உயர்ந்த மனப்பான்மையுடனே இதில் ஈடுபடுகிறவர்களே, தங்களுக்கும், மக்களுக்கும் நன்மை செய்து நல்ல பெயர் எடுக்கமுடியும் சிறப்பாக வடமாகாணத்திலே நடைபெற இருக்கும் பல கிராமத் தேர்தல்கள் மூலம் நாட்டுக்கு நல்ல முன்மாதிரி காட்டக்கூடிய சந்தர்ப்பம் இப்போது கிடைத்துள்ளது.

# சிவராத்திரி விரத மகிமை

— கு. வைத்தீசுவரக் குருக்கள் —

பரம் பொருளாகிய சிவபெருமானுக்கு அத்தியந்த பிரியமாயுள்ள இராத்திரி சிவராத்திரி எனப்படும். சைவசமயிகள் யாவரும் அத்தியாவசியம் சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்க வேண்டுமென்பது உண்மை நூல்களின் துணிபு விரதமென்பது மனம் பொறி வழியிற் போகாமல் நிற்றற் பொருட்டு உண்டியை விடுதலாயினும் சுருக்கியாயினும் மனமொழி மெய்களால் விதிப்படி மெய்யன்போடு இறைவனை வழிபாடு செய்வதாம் "சிவராத்திரி என்கிற இவ்விரதம் மனுடர்களின் பாவங்கள் அனைத்தையும் நாசஞ் செய்வதாயும், சண்டாளர்வரையில் மனிதர்கள் அனைவருக்கும் மோக்ஷத்தை அளிப்பதாயுமுள்ளது" என்று ஈசான சங்கிதை கூறுகின்றது. சிவராத்திரியில் பரமசிவனைப் பூசித்து நித்திரையில்லாமல் இருப்பவன் உத்தமமான போகங்களை அனுபவித்து மறுபடியும் பிறப்பதில்லை" என்று ஸ்காந்தபுராணத்திற் சொல்லப்பட்டது.

முன்னொரு கற்பத்திலே சிவபெருமானது மேன்மையை மறந்து பிரம விஷ்ணுக்களிருவரும் அகந்தை கொண்டு தாந்தாமே பிரமமென்று தம்முள் வாதித்துக் கடும்போர் செய்தனர் அப்பொழுது நாரத முனிவர் தோன்றி "நீங்கள் இருவிரும் முதல்வரல்லீர்; இன்னும் நீங்கள் மலைவிராயின் ஆதியாய் அருவுருவான பரம்பொருள் சோதியாய் உங்கள் நடுவே தோன்றுவர்" என்று உபதேசித்து மறைந்தருளினர். பிரமவிட்டுணுக்கள் நாரத முனிவர் கூறியவற்றை மனதிற் கொள்ளாதவர்களாய்ப் பலகாலம் யுத்தம் செய்தார்கள்.

இவைகளெல்லாவற்றையும் பரமசிவன் நோக்கி அவர்களது அகந்தையை நீக்கி அடிமைகொள்ளுமாறு திருவுளங்கொண்டு மாசிமாதத்திலே அபரபக்ஷ சதுர்த்தசியின் நடு இரவில் சோதிவடிவாகத் தோன்றியருளினர். அயனும் அரியும் கோபத்தையும் போரையும் நீக்கி அந்தச்சோதியைத் தரிசித்து நின்றார்கள். அப்பொழுது "இச்சோதியின் அடியையும் முடியையும் தேடுங்கள்" என்று அசரீரி வாக்கு எழுந்தது. அரிபிரமர்கள் இருவரும் சபதங்கூறி அடிமுடிகளில் ஒன்றை முன்னங்காண்பவரே பரம்பொருளாவர் என்று உறுதி செய்தனர்.

திருமால் பன்றிவடிவங் கொண்டு பூமியை இடந்து புவனங்கள் எங்குந் தேடிச் சென்று அதனடியைக் காணதவராய் அவருடைய திருவருளினாலே சோதிக்குச் சமீபமாய் வந்து நின்றார் பிரமா அன்னவடிவமெடுத்து மேலுள்ள புவனங்களில் தேடிச்சென்று முடியைக் காணுதவராய் வருந்தி விட்டுணுவை அணுகினர். இருவரும் சிவபூசை செய்ய ஆசையுற்றவர்களாய் சிவலிங்கந் தாபித்து அருச்சித்து வணங்கினர். சிவபெருமான் உமாதேவிபாசராய் அந்தச் சோதி மணித்தாய் அவர்கள் காணும்படி நிறைருள் செய்தார். பிரமவிட்டுணுக்கள் அப்பெருமானுடைய திருவடிகளை வணங்கித் தம்முடைய குற்றங்களைப் பொறுத்தருளுமாறு வேண்டினர் சிவபெருமான் தம்மை வழிபடுகின்ற தலையன்பை அவர்களுக்குக் கொடுத்துச் சோதியிலே மறைந்தருளினர்.

அந்த ஞானசோதியானது சுருங்கிவந்து உலகெலாந் துதிக்கும்படி ஒரு மலையாயது. பிரமாவும் விஷ்ணுவும் அச்சிவலிங்க ரூபமாய மலையை வணங்கி, மும்முறை பிரதக்ஷிணம் செய்து வணங்கித் துதித்துத் தங்கள் பதவிகளுக்குப் போயினர்கள்.

பிரமவிட்டுணுக்கள் தேடிய அம்மலை அருணாசலம் என்னும் பெயர் பெற்றது. அச்சோதி தோன்றிய இரவே சிவராத்திரியாயது. அத்தினத்தில் பலர் பூசித்து உயர்ந்தார்கள். இதுவே சிவராத்திரி தோன்றிய வரலாறு. இச்சரித்திரம் திருமுறைகளிலும் புராணங்களிலும் பிரசித்தி பெற்றது.

"சிவராத்திரி விரதமாவது மாசிமாதத்துக் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி திதியிலே சிவபெருமானைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம்" என்று நாவலர் பெருமான் சைவவினாவிடையிலும், "சிவராத்திரி விரதம் சூரியன் கும்பராசியிலிருக்கும் பொழுது மாசிமாத கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசியிலன்றி சௌரமாதத்தில் அநுட்டிக்க. சாந்திரமானத்தில் சிவராத்திரி பூஜை செய்தலாகாது" என்று ஸ்ரீசலம் சிவாகம வித்வான் சிவசுப்பிரமண்யக் குருக்கள் சைவசாஸ்திர பரிபாலனத்திலும் எழுதியவாற்ருல் சிவராத்திரிக்குரிய காலம் இதுவென நிச்சயமாகின்றது.

இத்தினத்தில் நித்தியகரமானுஷ்டானத்தை முடித்து அன்று முழுவதும் உபவாசமிருந்த நான்கு யாமத்திலும் நித்திரையின்றிச் சிவபூசை செய்தல்வேண்டும். ஆலயம், நதிதீரம், புஷ்பவனம், ஆசாரியருடைய கிருகம், தனதில்லம் முதலியன ஆன்மார்த்த பூசைக்குரிய தானங்களாம் சிவபூசையில்லாதவர்கள் நித்திரையின்றிச் சிவாலய தரிசனமும் ஸ்ரீ பஞ்சாக்ஷர செபமும், சிவபுராணங் கேட்டலும் முதலாய சிவபுண்ணியங்களைச் செய்தல் வேண்டும். சிவராத்திரி காலத்தில், இராத்திரி பதினன்கு நாழிகைக்குமேல் ஒரு முகூர்த்தம் இலிங்கோற்பவகாலமென விதிக்கப்பட்டிருப்பதால் அக்காலத்தில் அவசியகம் சிவதரிசனம் செய்யத்தக்கது.

"சிவராத்திரி தினத்தில் அர்த்தராத்திரியிற் செய்யும் பூசை சமஸ்தபாவங்களையும் போக்கவல்லது. சகலயாகங்களின் பலனையுந் தரத்தக்கது. எல்லா உயிர்கட்கும் சுகத்தைக் கொடுக்கவல்லது. சதுர்வித புருஷார்த்த சித்திகளையும் சம்பத்துக்களையும் வளர்ப்பது" என்று சிவராத்திரி பூசாபலன் காரணாகமத்திற் சொல்லப்பட்டது.

கிருதயுகத்தில் விநாயகரும் திரேதாயுகத்தில் சுப்பிரமணியரும், துவாபரயுகத்தில் மகாவிஷ்ணுவும், கலியுகத்தில் பிரமாவும பூசை செய்தனரெனவும் காரணாகமம் கூறும். திருமால் உயிர்களைக் காப்பது, பிரமா சிருட்டி செய்வது, உருத்திரன் அரசு செய்வது, [illegible] பெற்று வாழ்வெய்தியதும் இவ்விரதத்தை அனுஷ்டித்தமையாலேயென்று உபதேச காண்டம் செப்புகின்றது.

இனி நான்கு யாமங்களுக்கும் வில்வமும் தாமரையும் சண்பகமும் நந்தியாவர்த்தமும் முறையே விசேஷமாகச் சாத்துவதற்குரிய புஷ்பங்களாம். வில்வம் நான்கு யாமத்திற்குமுரியது. பயற்றன்னமும் பாயசான்னமும் எள்ளன்னமும் சுத்தான்னமும் முறையே விசேஷமாக நான்கு யாமங்களுக்கும் நிவேதித்தற்குரியன. சுத்தான்னம் நான்கு யாமத்திற்குமுரியது. இவை முதலிய உபகரணங்களைக் கொண்டு நான்கு யாமங்களிலும் விசேஷ பூசை செய்க.

இவ்விரதத்துக்கு உபவாசம் உத்தமம். அதற்கியலாதோர் நீரேனும் பாலேனும் உண்ணலாமென்றும், அதற்கியலாதவர் பழம் புசிக்கலாமென்றும், அதற்குமியலாதோர் பணிகாரம் உண்ணலாமென்றும் சாஸ்திரங்கள் செப்புகின்றன.

பசிக்களிந்தால் நீரலது பால் பழந்தானும் புசிக்க முதல் யாமம் பூசித்து.

நான்கு யாமமும் நித்திரை யொழிக்க இயலாதவர் இலிங்கோற்பவகாலம் நீங்கும்வரையாயினும் நித்திரை யொழிக்கவேண்டும். ஸ்கந்தபுராணத்தில் 'உபவாசம், நித்திரையிலாதிருத்தல், சிவனைப் பூசை செய்தல் இம் மூன்றும் ஒன்றோடொன்று சமானமுள்ளவையும் முக்கியமானவைகளாயுமுள்ளன' என்று சொல்லப்பட்டது. உபவாசதினத்துக்கு மற்றை நாட் காலையில் நித்தியகரும் முடித்துக் கொண்டு அன்பர்க்கமுதருத்திப் பாரணம் செய்க.

## மகாசிவராத்திரி

### துணுக்காய்

வவனிக்குளம் சிவாலயத்தில் எதிர்வரும் 12-3 64 வியாழக்கிழமை மகாசிவராத்திரி விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதற்குரிய சகல வேலைகளையும் திருப்பணிச்சபையினர் செய்து வருகின்ருர்கள். சிவராத்திரி தினத்தன்றிரவு கொக்குவில் திரு. அ. குமாரசாமிப் புலவர் 'சிவராத்திரி மகிமை' என்னும் விஷயம் பற்றி கதாப்பிரசங்கம் செய்வார். மறுநாள் காலை சூரிய உதயத்திற்கு பார்வபதி சமேத யோகேஸ்வரர் வவனிக்குளத்தில் தீர்த்தம் ஆடுவார்.

### சூராவத்தை

சூராவத்தை முத்துமாரியம்மன ஆலயத்தில் மாசி 29-ம் திகதி (12-2-64) சிவராத்திரி விழா நடைபெறும். நான்கு ஜாமப் பூசைகளுடன் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். சுவாமி அலங்காரத்துடன் எழுந்தருளும் கதாப்பிரசங்கம், சங்கீதக்கச்சேரிகள், கூட்டுப்பிரார்த்தனைகள் தோத்திரப்பாடல்கள் முதலிய நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

### தெல்லிப்பழையில்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் சிவராத்திரிவிழா கொண்டாட ஏற்பாடாகியுள்ளது. மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் விழாவில் இடம் பெறும். அதிகாலையில் மாணவர் பஜனைக்குழு கீரிமலைக்குச் செல்லுமெனத் தெரிகிறது.

அளவெட்டி ஞானோதயவித்தியாசாலையில் அமைக்கப்படும் 'தாசராச' அரங்கில் சிவநேர்கலை மன்றத்தின் ஆதரவில் சிவராத்திரி விழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவிலிலும் சிவராத்திரி விழா கொண்டாடப்படும். நான்கு ஜாமப் பூசைகளும் புராணபடனமும் நடைபெறும்.

# ஐயாறன்

### எழுதுவது

சென்னையிலிருந்து கிரிக்கெட் கோஷ்டியினர் கொழும்புக்கு வந்து விளையாட முடிந்ததைக் கேட்க வியப்பாகவும் மகிழ்ச்சியாகவுமிருந்தது. செவ்வாய்க் கிரகத்திலிருந்து இங்கு மக்கள் வந்தாலும் வரலாம், சென்னையிலிருந்து இலங்கைக்கோ, இங்கிருந்து சென்னைக்கோ மக்கள் போக முடியாதென்ற நிலை உருவாகிவருகிறதல்லவா?

இந்த தடபுடல் தர்பாரில், சென்னையிலிருந்து ஒரு கோஷ்டியினர் இங்கு வந்து விளையாடவும், அப்பந்தயத்தில் இலங்கை வெல்லவும் முடிந்ததைக் கேட்க எனக்கு டபிள் சந்தோஷம்.

"கோபாலன் கிரிக்கெட் பந்தயத்தில்" சென்ற முறையும் இலங்கையே சென்னையை வென்றது. சபாஷ்.

* * *

கொழும்பிலே ஒரு தொழிற் சங்கக் காரியாலயத்திலே வெடிகுண்டு வெடித்து இருவர் காயம்பட்ட செய்தியைக் கேட்க மிக வேதனையாக இருந்தது.

ஸி. டி. யூ. எப். (சண்முகதாசன்) சங்கக் காரியாலயத்தில்தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இதற்கு யார் காரணமாக இருப்பினும் சரி, இந்த பயங்கர பலாத்கார முறையை யாரும் ஆதரிக்க முடியாது.

'உலகத் தொழிலாளரே ஒன்றுபடுங்கள்' என்று கோஷித்த தலைவர்களே தங்களுக்குள் பிளவுபட்டு இரு போட்டி சங்கங்களாகப் பிரிவதைப் பார்க்கும்போது, இதைவிடப் பெரிய விபரீதம் இருக்க முடியுமா! மாஸ்கோ - பீகிங் வேற்றுமைகள் தான் இங்கு இந்த தற்கொலைப் பிளவுக்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது.

காரணம் எதுவாயினும் சரி, இந்த வெடிகுண்டு சம்பவம், இங்கு தொழிற் சங்க இயக்கத்துக்கும் தொழிலாளருக்கும் ஏற்பட்டுள்ள ஆபத்தை உணர்த்தவும், பிரிந்துள்ள தலைவர்களை ஒன்றுபடச் செய்யவும் தூண்டுமாயின் இதுவும் ஒருவிதத்தில நன்மையே. இன்றேல் இங்கு தொழிற்சங்க இயக்கமே நசித்து, தொழிலாளருக்குப் பெரும் கேடாக முடியுமென்பதற்கு இது ஓர் எச்சரிக்கையாகும்.

* * *

யாழ்ப்பாணம் ஸ்ரீ கைலாசப் பிள்ளையார் கோவிலடியில் உள்ள வாசிகசாலையினர், தங்கள் வாசிகசாலை தளபாட நிதிக்காக ஒரு புதியவிதமான முயற்சியைச் செய்வதாக ஒரன்பர் அறிவிக்கின்ருர்.

நாளை மகாசிவராத்திரி தினத்தன்று மாலை 6 மணிக்கு கோவிலில் பஜனை ஆரம்பித்து அப்பகுதியிலே வீடுவீடாகச் செல்லப்போவதாயும், இயன்ற பொருளுதவியைச் செய்யுமாறும் கேட்டிருக்கின்ருர்கள்.

ஆயிரம் ரூபாய் தான் தேவையாம். வேண்டுவார் வேண்டுவதை ஈவாருன பிள்ளையார், அங்கு பலர் மனதிலும் புகுந்து, இதை நிறைவேற்றுவாரென்பதில் ஐயமில்லை.

* * *

நயினதீவு நாகபூஷணி திருவிழாவின்போது ஒரு தங்கத்தாலியை அங்கு சின்னப்பு வேலுப்பிள்ளை என்பவர் கண்டெடுத்து, ஊர்காவற்றுறை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஒப்படைத்துள்ளாராம். இன்னும் அதன் உரிமையாளர் வந்து கேட்கவில்லை. 5 மாதங்களுக்குள் அதை யாரும் வந்து கேட்காவிடில், ஏலம் போட்டு, அதில் பாதி கண்டெடுத்துக் கொடுத்தவருக்குக் கொடுக்கப்படுமென்று மாஜிஸ்டிரேட் 'வால்டன் 'செஜுட்' மூலம் அறிவித்திருக்கிருர். தாலி பறிகொடுத்தவர் கவனிக்க.

(5-ம் பக்கம் பார்க்க)

# சைப்ரஸில் மீண்டும் சண்டை
## பிரிட்டிஷ் துருப்புக்கள் மீது தாக்குதல்

நிக்கோஸியா, மார்ச் 10
சைப்ரஸின் மேற்குப் பகுதியில் கடும்சண்டை மூண்டிருப்பதாயும், நிலைமை ஆபத்தில் இருப்பதாயும் பிரிட்டிஷ் ராணுவ வட்டாரங்கள் கூறின.
இங்கு 6000 கிரேக்கர்களும் 8000 துருக்கியர்களும் வசிப்பதாயும் துருக்கியர்களைச் சரணுகதி அடையுமாறு கிரேக்கர்கள் தடபிவருவதாயும் கூறப்படுகிறது.
இங்கு நிலைகொண்டுள்ள 100 பிரிட்டிஷ் துருப்புகள் மீது நேற்று முழுதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதென்றும், பிரிட்டிஷார் திருப்பிச் சுட்டதாயும் அறிவிக்கப்படுகிறது.
துருக்கி வெளிநாட்டு மந்திரி நேற்று அமெரிக்க, பிரிட்டிஷ் தூதர்களுடன் நிலைமைபற்றி விவாதித்தார்.
இதற்கிடையில் சைப்ரஸுக்கு சமாதானப்படை அமைக்க திரு. யுதாண்ட் விடுத்த விண்ணப்பத்துக்குப்போதுமான ஆதரவு கிடைக்கவில்லை எனக் கருதப்படுகிறது. இதுவரை கனடா மட்டுமே யுதாண்டின் கோரிக்கைக்கு உதவிசெய்ய முன்வந்திருப்பதாயும், இதர நடுநிலைமை நாடுகளும் படை அனுப்பினுல்தான் தாமும் அனுப்பமுடியும் என அது நிபந்தனை விதித்திருப்பதாயும் கூறப்பட்டது.
சைப்ரஸில் மத்தியஸ்தராக உயர்ந்த ராஜதந்திரி ஒருவர் நியமிக்கப்படாதவரை வேறு நியமனத்தைத் தாம் ஏற்க முடியாது என துருக்கி அறிவித்திருக்கிறது.

## தஞ்சை நூல்நிலையம்

தஞ்சாவூர், மார்ச் 10
தஞ்சாவூர் சரபோஜிராஜா சரஸ்வதி மகால் நூல்நிலையம் தனியார் ஸ்தாபனம் என்றும் நூல்நிலைய சொத்துக்களை சென்னை, ஆந்திரா அரசாங்கங்களிடையே பிரிக்கும் பிரச்னை இல்லை என்றும் நூல்நிலைய கௌரவ காரியதரிசி திரு. எஸ். கோபாலன் கூறினர்.

## ஜம்முவில் விக்ரக திருட்டு

ஜம்மு, மார்ச் 10
சென்ற டிசம்பரில் ஜம்முவில் உள்ள ஒரு ஆலயத்திலிருந்து ராமர் லக்ஷ்மணர் விகரகங்கள் திருட்டுப் போனது பற்றி புலன் விசாரணை நடத்துவதற்கு மத்திய துப்பறியும் இலாகாவைச் சேர்ந்த ஒரு துப்பறியும் அதிகாரியை அனுப்பி உதவுமாறு காஷ்மீர் பிரதமர் சாதிக், யூனியன் உள்நாட்டு மந்திரியைக் கேட்டுக்கொண்டிருக்கிறர்.

## முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு

சென்னை, மார்ச். 10
தமிழ் நாட்டில் முஸ்லிம்களுக்கு முழுப்பாதுகாப்பு அளிக்கப்படும் என சட்டசபையில் முதன் மந்திரி திரு பக்தவத்சலம் அறிவித்தார்.

## நெய்வேலிக்கு ரூ. 775 லட்சம் உதவி

புதுடில்லி, மார்ச். 10
நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டத்திற்கு ரஷ்யா ரூ 7,75,000,00 அளிக்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

## நில உச்சவரம்பு சட்டவிரோதம்

புதுடில்லி, மார்ச். 10
1961-ம் ஆண்டு சென்னை அரசாங்கம் இயற்றிய நில உச்சவரம்புச் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்துக்கு மாறுனதென சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்திருக்கிறது.

## ஜோன்ஸன் - டிகால் சந்திப்பர்?

வாஷிங்டன், மார்ச். 10
அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸனும் பிரெஞ்சு அதிபர் டிகாலும் சந்திக்கும் சாத்தியம் பற்றி பாரிசிலுள்ள அமெரிக்கத் தூதர் இங்கு ஆலோசிப்பார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.
ஜனதிபதி ஜோன்ஸன் கடந்த சனிக்கிழமை ஜெனரல் டிகாலைச் சந்திக்கும் விருப்பத்தை வெளியிட்டிருந்தார்.

## மட்டற்ற அமெரிக்க உதவி

ஸைகோன், மார்ச் 10
அமெரிக்கா தென் வியட்னுமுக்கு நிபந்தனையின்றி, மட்டற்ற உதவி அளிக்குமென அமெரிக்க பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாரா கூறியிருப்பதாக அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## வர்த்தக மந்திரிகள் மகாநாடு

லண்டன், மார்ச் 10
காமன்வெல்த் வர்த்தக மந்திரிகளின் மகாநாடு வருகிற 19, 20-ந் தேதிகளில் லண்டனில் நடைபெறும்.

## ஐ. அ. குடியரசு தேர்தல்

கெய்ரோ, மார்ச் 10
ஐக்கிய அரபுக் குடியரசில் 150 சட்டசபை ஸ்தானங்களுக்கான தேர்தலில் இன்று 70 லட்சம் பேர் வாக்குப்பதிவு செய்வார்கள்.

## கம்போடிய யோசனை: இந்தியா வரவேற்பு

புதுடில்லி, மார்ச் 10
கம்போடியாவின் நடுநிலைமைக்கு உத்தரவாதமளிக்கும் மகாநாடொன்றை நடத்தும் யோசனையை இந்தியா வரவேற்பதாக அறிவிக்கப்பட்டது. இளவரசர் நாரோடம் சிகானக் இதுசம்பந்தமாகப் பிரதமர் நேருவுடன் கடிதப் போக்குவரத்து நடத்திவருவதாக அறிவிக்கப்பட்டது.

## 22 பேர் மாண்டனர்

கல்கத்தா, மார்ச் 10
கல்கத்தாவுக்கருகே போல்பூரில் நடைபெற்ற ரயில் விபத்தில் மாண்டவர்கள் தொகை இப்போது 22 ஆக உயர்ந்திருக்கிறது.

## "லிபியாவிலிருந்து தளங்களை அகற்றுக"

லண்டன், மார்ச் 10
லிபியாவிலுள்ள அமெரிக்க, பிரிட்டிஷ் தளங்களைக் காலி செய்வது பற்றி பேச்சுவார்த்தை நடத்துமாறு அமெரிக்காவையும், பிரிட்டனையும் அந்நாடு கேட்டுக்கொண்டிருக்கிறது.

## போலந்து ஹாக்கி கோஷ்டி

புதுடில்லி, மார்ச் 10
போலந்து ஹாக்கி விளையாட்டுக் கோஷ்டி ஒன்று இந்தியா வரும் எனத் தெரிகிறது.

# "ரஷ்ய எல்லையை சீன பல தடவை மீறியுள்ளது"
## இந்தியா வந்துள்ள சோவியத் தூது கோஷ்டியினர் தகவல்

புதுடில்லி, மார்ச் 10
ரஷ்ய எல்லையை சீன பல தடவைகள் மீறியிருப்பதாயும், இதுசம்பந்தமாக ரஷ்யா, சீனவுக்குப் பல கடிதங்களை அனுப்பியிருப்பதாயும் இந்தியா வந்துள்ள சோவியத் பார்லிமெண்டரி தூதுகோஷ்டித் தலைவர் கூறினர்.
எல்லையை நிர்ணயிக்கு முகமாக இருநாடுகளையும்கொண்ட கூட்டுக் கமிட்டிகள் நியமிக்கப்பட்டிருப்பதாயும் அவர் கூறினர்.
திரு குருஷ்சேவ் சமீபத்தில் அறிவித்துள்ளபடி எல்லைத் தீர்வுக்கு பலாத்காரம் உபயோகிக்கப்படக் கூடாது என்றும் அவர் மேலும் கூறினர்.
தூதுகோஷ்டியின் மற்ருேர் அங்கத்தினர் பேசுகையில் சீனவிலுள்ள சிங்கியாங் மாகாணத்திலிருந்து பெருந்தொகையான சீனர்கள் ரஷ்ய எல்லைக்குள் வந்திருப்பதாயும், சிங்கியாங்கில் அவர்கள் கஷ்டமுறுவதே இதற்குக் காரணம் என்றும் கூறினர்.

## எழுதுவினைஞர் சங்கம் ஆட்சேபம

கொழும்பு, செவ்.
இலங்கை நிர்வாகசேவை பரீட்சைக்கான பாடத்திட்டம் சரியானதல்ல என்று அரசாங்க குமாஸ்தாக்கள் சங்கம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. ஜினதாசா கமிட்டி சமர்ப்பித்த அறிக்கை பற்றி பரிசீலனை செய்யப்படும் இந்த நேரத்தில் நிர்வாகசேவைப் பரீட்சைக்கான பாடத்திட்டத்தை பொதுசேவைக் கமிஷன் வெளியிட்டிருக்கக் கூடாதென அரசாங்க குமாஸ்தாக்கள் சங்கம் தெரிவித்துள்ளது. அரசாங்க எழுதுவினைஞராக பத்து வருடங்கள் கடமையாற்றியவர்களை நிர்வாக சேவைப் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்க வேண்டுமெனவும் அரசாங்க குமாஸ்தாக்கள்சங்கம் கேட்டுள்ளது.

## கருவாடு விநியோகம்

கொழும்பு, செவ்.
ஐக்கிய பண்டகசாலைகளில் ஒவ்வொரு கூப்பனுக்குமுரிய மாசுக்கருவாடு உரிய முறையில் விநியோகிக்கப்படுகிறதா என்பதனை பரிசோதனை செய்ய விலைக்கட்டுப்பாட்டு பரிசோதகர்கள் திடீரென ஐக்கிய பண்டகசாலைகளுக்கு விஜயம் செய்வர்.
இம்மாதம் ஒவ்வொரு கூப்பனுக்கும் ஒரு அவுன்ஸ் மாசுக் கருவாடு விநியோகிக்கப்படவிருக்கிறது. இது உரிய முறையில் விநியோகிக்கப்படுகிறதா என்பதை பரிசோதிக்க ஐக்கியபண்டகசாலைகளுக்கு திடீரென விஜயம் செய்யுமாறு உணவுக் கமிஷனர் பரிசோதகர்களுக்கு உத்தரவிட்டுள்ளார். ஒவ்வொரு கூப்பனுக்கும் ஒரு அவுன்ஸ் கருவாடு என்பதை ஐக்கியபண்டகசாலை நிர்வாகிகள் மக்களுக்கு தெரியப்படுத்தவேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளனர்.

## முஸ்லிம் சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம், செவ்.
யாழ். முஸ்லிம் சனசமூக நிலையம் எதிர்வரும் இஸ்லாமிய புத்தாண்டைக் கொண்டாடும் முகமாக திருக்குர் ஆன் மனனம், இஸ்லாமிய பாட்டு, பேச்சு, பொதறிவு, கட்டுரைப்போட்டிகளை இஸ்லாமியர்களிடையே நடாத்த ஒழுங்குகள் செய்துள்ளது.






# மிகப்பெரிய மாட்டுவண்டி சவாரிப் போட்டி

தெல்லிப்பழை, செவ்.

மாவிட்டபுரத்தில் மிகப் பெரிய அளவில் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி ஒன்றினை நடத்துவதற்கான ஏற்பாடுகள் துரிதமாகச் செய்யப்பட்டுவருகின்றன. இம்மாதம் 29-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கூத்தியவத்தை திறந்த வெளிஅரங்கில் நடைபெறவிருக்கும் சவாரிப் போட்டியில் சுமார் முப்பது சோடி மாடுகள் போட்டியிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் முதன் முதலாக இப்பகுதியில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியை நடத்திய பனை வாலிபர் சங்கம் இவ்வருடமும் இப்போட்டியை மிகச் சிறப்பான முறையில் நடத்துவதென உத்தேசித்துள்ளது. இரட்டை மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியுடன் இளைஞர்களுக்கான சைக்கிளோட்டப் போட்டியும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

விளையாட்டு விழா என்ற ரீதியில் இந்தப்போட்டிகளை நல்ல முறையில் நடத்தி உயர்ந்த பரிசுகள் வழங்க ஏற்பாடாகியுள்ளது.

பனை வாலிபர் சங்கத்தலைவர் திரு. ச. கந்தசாமி தலைமையில் உள்ள உபகுழு இப்போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளைக் கவனித்து வருகிறது. மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியிலும் சைக்கிளோட்டப்போட்டியிலும் கலந்து கொள்பவர்கள் 28-ம் திகதி வரை விண்ணப்பிக்கலாமெனவும் தெரிகிறது.

## 'நடவடிக்கை எடுக்காததேன்?'

கொழும்பு, செவ்

பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. எப். ஆர். ஜெயசூரியா, உண்ணாவிரதமிருந்ததன் மூலம் பல்கலைக் கழகத்தை அவமதித்ததையிட்டு தக்க நடவடிக்கை எடுக்காததுபற்றி பல்கலைக்கழக கோர்ட்டிற்கு புகார்செய்யப்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழக கோர்ட்டின் அடுத்த கூட்டத்திற்கு ஒரு பெட்டீசம் சமர்ப்பிக்கப்படுமென பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. திரு. ஜெயசூரியா அண்மையில் மூன்றுதடவை, எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக உண்ணாவிரதமிருந்திருக்கிறார்.

## வெளிநாட்டு உதவிகள் பழுதடைகின்றன

கொழும்பு, செவ்.

இரத்மலானையிலுள்ள நீர்ப்பாசன இலாகாவின் வேலைஸ்தலத்தில் ரூ. 90,000 பெறுமதியான இயந்திரங்களும் உபகரணங்களும் வீணாக்கப்பட்டுக்கிடப்பதாக அறியப்படுகிறது.

பாரம்தூக்கும் பெரிய இயந்திரங்கள், லொறிகள் உட்படப் பல இயந்திர சாதனங்கள் சிறிது பழுது ஏற்பட்டுள்ள காரணத்தினால் ஒரு பக்கத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்த இயந்திரங்கள் மழைவெயில் படக்கூடிய இடத்தில் கிடப்பதால் விரைவில் துருப்பிடிக்கின்றன.

இந்த இயந்திரசாதனங்களும் உபகரணங்களும் உதவித் திட்டத்தின்கீழ் வெளிநாடுகள் அனுப்பியவை.

## மாவிட்டபுரத்தில் பிரதிஷ்டை ஊர்வலம்

மாவிட்டபுரம், செவ்.

திருக்கோணேஸ்வரத்தில் பிரதிஷ்டை செய்யப்படுவதற்காக மகாலக்ஷ்மி, பூலக்ஷ்மி சமேத மகாவிஷ்ணு மூர்த்தம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலிருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டார். செவ்வாய்க்கிழமை விஷ்ணுமூர்த்தி கோவிலிலிருந்து வவுனியாவை நோக்கிச் புறப்பட்டார். வவுனியாவை புதன்கிழமை அடைவாரெனவும் அறிவிக்கப்பட்டுள்ள விஷ்ணுமூர்த்திக்கு வழி நெடுகிலும் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

## திறைசேரி புனரமைப்பு

கொழும்பு, செவ்வாய்

திறைசேரிக்கு ஆலோசனை கூறுவதற்கென ஆலோசகர் குழு ஒன்று விரைவில் நிறுவப்படும். இலாகாக்களுக்கு நிதி உதவி அளிப்பது சம்பந்தமாகவும், திறைசேரியின் வேறு பல காரியங்கள் சம்பந்தமாகவும் இந்த ஆலோசகர் குழு ஆலோசனை தெரிவிக்கும்.

இந்தக் குழுவுக்கு அரசாங்க அதிகாரிகளும், தனிப்பட்ட ஸ்தாபன அதிகாரிகளும் நியமிக்கப்படுவர். திறைசேரியின் நடவடிக்கைகள் பற்றி மந்திரிகள், எம். பி.க்கள், தொழிற் சங்க வாதிகள், பொதுமக்கள் ஆகியோர் பலமுறை கண்டித்ததைத் தொடர்ந்தே இவ்வித குழு ஒன்று அத்தியாவசியமானதென கருதப்பட்டு, அவ்விதம் குழுவை நியமிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. திறைசேரியை புனரமைக்கும் முதல் நடவடிக்கையாகவே ஆலோசகர் குழு நியமிக்கப்படவிருப்பதாக திறைசேரி வட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

தேவையேற்படுமானால் ஐ. நா., கொழும்புதிட்டம், நிபுணர் ஏஜன்சி ஆகிய ஸ்தாபனங்களிலுமிருந்து ஆலோசனைகள் பெறப்படும் எனவும் கூறப்படுகிறது.

## ஆசிரியருக்கு பிரியாவிடை

யாழ்ப்பாணம், செவ்வாய்

பூநகரி அத்தாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆங்கில உதவியாசிரியராகக் கடமையாற்றிய திரு. கா. கணபதிப்பிள்ளை, பரந்தன் குமரபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு மாற்றலாகிச் சென்றதையொட்டி ஒரு பிரியாவிடை நடைபெற்றது.

திரு. பொ. தருமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இப்பிரியாவிடை கூட்டத்தில் திருவாளர்கள் வீ. ஆனந்தசங்கரி, கே. பசுபதி மு. செல்லையா சர் ஏ. ஏ. றசாக், எஸ். எம். ஹனிபா, கு. கணேசன் ஆகியோர் பாராட்டிப் பேசினார்கள்.

## வித்தியோதய பல்கலைக்கழகம் திறக்கப்படவில்லை

கொழும்பு, செவ்.

சாதாரண மாணவர்களுக்கும் பௌத்த மாணவர்களுக்குமிடையில் இடம்பெற்ற கைகலப்பு காரணமாக மூடப்பட்ட வித்தியோதய பல்கலைக்கழகம் இன்று மீண்டும் திறக்கப்படவிருந்தது. ஆனால் மேலும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக உபவேந்தர் வண. பலனறுவ விமலதர்ம நாயகதேரோவின் உத்தரவுப்படியே இவ்விதம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## கூட்டுறவு தொழிலாளர் சங்கம்

சுழிபுரம், செவ்வாய்

படித்த வாலிபர்கள் மத்தியிலுள்ள வேலையில்லாப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு பல தொழில்களைச் செய்யும் கூட்டுறவுத் தொழிலாளர் சங்கம் ஒன்று மாதகல் விக்னேஸ்வரா வித்தியாசாலையில் நடைபெற்ற கூட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. கூட்டத்திற்கு திரு க. சிற்றம்பலம் தலைமைவகித்தார். மாதகல் கிராமசேவையாளர், கிராமசபை அங்கத்தவர், கல்விப் பகுதி உத்தியோகத்தர் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.


சுத்தமான பால்



நெஸ்பிரே

நிலையான புதுமை
நிர்மலமான ரகம்
நிகரிலா சிக்கனம்

பலமானது,
நலமும் பலமும் அளிக்கும்
நல்ல சமதையான ஆகாரத்தின்
ஒரு அத்தியாவசியமான
அங்கமாகத் திகழ்கின்றது.

குடும்பத்தினர் ஒவ்வொருவருக்கும்
நாளாந்தம் முழு ஆடைப்பாலைக்
கொடுத்து வாருங்கள்.

அதிமான பாலைப் பருகுங்கள்.....
முழு ஆடை நிரம்பிய நெஸ்பிரே
பவுடர் பாலை அருந்துங்கள்.




நெஸ்பிரே பாதுகாப்பான பால்



# வட்டுக்கோட்டைத் தொகுதி பாடசாலை உடற்பயிற்சிப் போட்டி

சுழிபுரம், செவ்வாய்

வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டி வட்டார வித்தியாதிகாரி திரு. எஸ். சபாபதி தலைமையில் நடைபெற்ற போட்டி முடிவில் பரிசு பெற்ற கல்லூரிகளுக்கு சான்றிதழ்களை வழங்கி திரு. எஸ். சபாபதி கூறியதாவது: "ஒவ்வொரு மாணவனுக்கும் உடற்பயிற்சி மிகவும் இன்றியமையாததாகும். மாணவர்கள் நல் திடகாத்திர வீரர்களாக விளங்குவதற்கும், நோயற்ற வகை வாழ்வதற்கும் உடற்பயிற்சிப் போட்டிகள் மிக அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாகும். போட்டிக்காகப் பயிற்சியை மேற்கொள்ளாமல் உடல் வளர்ச்சிக்காக கொள்ள வேண்டும். போட்டிகள் சுழிபுரம் அரசினர் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. போட்டி முடிவுகள் பின்வருமாறு:-

13 வயது பெண்கள்: சுழிபுரம் ஐக்கிய சங்கம், ஜயிந்தா பண்டத்தரிப்பு, தொல்புரம் விக்கினேஸ்வரா.

16 வயது பெண்கள் 'ஏ' பிரிவு: பண்டத்தரிப்பு மகளிர், காரைநகர் இந்து, விக்ரோறியக் கல்லூரி.

16 வயது பெண்கள் 'பி' பிரிவு: சில்லாலை அற். சி. பாடசாலை, பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை.

16 வயது ஆண்கள் 'பி' பிரிவு: விக்ரோறியாக் கல்லூரி, காரைநகர் இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி.

13 வயது பெண்கள்: சில்லாலை அற். சி. பாடசாலை, ஜயிந்தா பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை திருஞான சம்பந்தர்.

19 வயது ஆண்கள்: 'ஏ' பிரிவு: யாழ்ட்டன் கல்லூரி, காரைநகர் இந்து.

19 வயது ஆண்கள் 'பி' பிரிவு: வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, காரைநகர் இந்துக் கல்லூரி.

13 வயது ஆண்கள் 'பி' பிரிவு: தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாசாலை.

19 வயது ஆண்கள்: பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை.

16 வயது பெண்கள் 'ஏ' பிரிவு: பண்டத்தரிப்பு மகளிர்.

பாட்டா சப்பாத்துக் கம்பனியினர் மூன்று விசேட பரிசையும் வழங்கினர்.

---

## கொழும்பு மாநகரசபை வட்டார விஸ்தரிப்பு

கொழும்பு, செவ்வாய்

கொழும்பு மாநகரசபையின் வட்டார விஸ்தரிப்பு வேலைகளைக் கவனிக்க ஒருவர் கொண்ட கமிஷன் நியமிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதியான திரு. சி. எக்ஸ். மார்ட்டினை இந்தக் கமிஷனுக்கு நியமிப்பதென உள்ளூராட்சி மந்திரி திரு. ஏ. பி. ஜெயசூரியா முடிவு செய்துள்ளார்.

மாநகரசபையின் வட்டாரங்களை விஸ்தரிப்பது பற்றி ஆலோசனை செய்து அதற்கான வேலைகளைக் கவனிக்க ஒரு கமிஷன் நியமிக்கப்பட வேண்டுமென சென்ற வருடம் மாநகரசபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருந்தது. முன்னர் 15 வார்ட்டுகள் இருந்தது ஆனால் இரண்டு வட்டாரங்கள் அதிகரிக்கப்பட்டு டிசம்பரில் தேர்தல் நடைபெற்றது.

---

## பாடசாலைக்கு பால் மா இல்லை

யாழ்ப்பாணம், செவ்வாய்

கலவெட்டித்திடல் சைவ வித்தியாசாலைக்கு 62ம் ஆண்டு ஐப்பசி மாதம் முதல் செயர் பால் விநியோகிக்கப்படாததால், கலவெட்டித்திடல் காந்திய சேவா சங்கத்தினர், செயர் ஸ்தாபனத்திற்கும், வட பிரதேச உதவி வித்தியாதிபதிக்கும் கிளிநொச்சி எம். பி. திரு. சிவசுந்தரத்திற்கும் கடிதம் எழுதியுள்ளார்கள்.

இது சம்பந்தமாக இப்பாடசாலையில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர் வவுனியா கச்சேரியிலுள்ள உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்கும் கடிதம் எழுதியுள்ளார்.

---

## வானொலிநிகழ்ச்சிகள்

### புதன் 11-3-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 காலைக்கதிர், 6-50 இஸ்லாமியகீதம், 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 திரை இசை, 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிபதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-10 விலைவாசிகள், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 நேயர்விருப்பம், 7-15 பேச்சு — "சித்த வைத்தியத்தின் முக்கியத்துவம்" — திரு. ரி. குணரத்தினம், 7-30 வயலின் — பிறிம்ரூஸ் ஜே காசிநாதர், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 மூளைக்கு வேலை, 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாசகம், 7-30 மணித்திருநாடு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2-40 ஜெயபேரிகை.

மாலை 5-15 வீணை — டி. ஆர். வரதாச்சாரி, 5-45 ஒலிபதிவுகள்.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 செய்தி அரங்கம், 7-45 நாடகம், 8-00 திரைப்பட இசை, 8-45 குரலிசை, 9-20 பொன்னெளிர் பாரதம், 9-50 இசைமாலை, 1-00 வீணை — டி. ஆர். வரதாச்சாரி.

---

## பாங்குளம் சித்திவிநாயகர்

துணுக்காய், செவ்வாய்

மாங்குளம் சித்தி விநாயகர் ஆலயக் கட்டிடத் திருப்பணி வேலைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்திற்கு அத்திவாரக்கல் சென்ற 4-6-63 ல் காணி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஸ்ரீ காந்தாவினால் நாட்டப்பட்டது. இக்கட்டிட வேலைகளைச் செய்து முடிக்க ரூபா 20,000 வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர் வரும் ஆவணி மாதத்தில் நடைபெறும் என்று திருப்பணிச் சபையினர் தெரிவித்துள்ளார்கள்.

---

சுழிபுரம், செவ்

சித்தங்கேணி ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோவில் பன்னிரு திருமுறைப் பூர்த்தி விழா மிகவும் சிறப்பாக நடைபெற இருக்கின்றது. 12-3-64 வியாழக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் விநாயகப் பெருமானுக்கு நான்கு சாமமும் விசேட பூஜைகள் நடைபெற்ற பின்னர், இரவு 1 மணிக்கு திருமுறைகள் வீதிவலமாக கீரிமலைக்கு கொண்டு செல்லப்படும். கீரிமலையில் திருமுறைகளின் பெருமைகளைப் பற்றி பல அறிஞர்கள் சொற்பொழிவு செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. ஊர்வலத்தின் போது தேவார பாராயணமும் பஜனையும் நடைபெறும்.

---

## 'நாவலர் பாடசாலை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பிரதிநிதித்துவம் வகிக்கும் தொகுதிக்குள் இப்பாடசாலை அமைந்திருக்காததகாரணத்தால் டாக்டர் நாகநாதனின் சிபார்சு விலக்கப்படவேண்டுமென்றும் இப்பாடசாலை யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பாவின் தொகுதிக்குள் அமைந்துள்ளது என்றும் தீர்மானம் தெரிவித்திருந்தது.

டாக்டர் நாகநாதன் இதற்கான பதிலில் தெரிவித்துள்ளதாவது:-

'சைவபரிபாலன சபையின் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்ட சாரமும் முறையும் என்னைப் பெரிதும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியது. விஷயங்கள் தங்களுக்கு தவறாக விளக்கப்பட்டுள்ளதென்றும் எனது நோக்கங்கள் திரிபுபடுத்திக தெரிவிக்கப்பட்டுள்ளன என்றுமே நான் எண்ணவேண்டியுள்ளது. நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை மூடப்படவேண்டுமென எந்தவித எழுத்துமூலமான மகஜரையும் நான் அனுப்பவில்லை இது பற்றி யாரையும் நான் கோரவுமில்லை.

பாடசாலைகள் புனரமைப்புப் பகுதி டைரக்டருடனும், பின்னர் வடபகுதி உதவி வித்தியாதிபதியுடனும் நான் பேச்சுவார்த்தை நடத்திய போது எனது தொகுதிப் பாடசாலைப் புனரமைப்பு வேலைகள் சம்பந்தமாக எனது கருத்துகளைத் தெரிவித்தேன்.

சொந்த அரசியல் நோக்கங்களுக்காக இவ்வித புனரமைப்பு வேலைகள் இடம்பெறக்கூடாதென்பதும் பள்ளி செல்லும் மாணவர்களின் எதிர்கால நலன் கருதியே இவ்வித புனரமைப்பு நடைபெற வேண்டுமென்பதுமே எனது திடமான நோக்கமாம்.

யாழ்ப்பாணத்தில் உள்ள எமது பாடசாலைகளில் பல மாட்டுக்கொட்டில்கள் போல் இருக்கின்றன என்பதையும், இங்கு பல பாடசாலைகள் இடவசதியற்று விஸ்தரிக்கப்பட இடமின்றி இருக்கின்றன என்பதையும் நான் வெளிப்படையாகக் கூற விரும்புகின்றேன்.

மேற்குறிப்பிட்ட இரு கல்வியதிகாரிகளுக்கும் ஓட்டுமடத்திலுள்ள சிறுவர்கள் கல்வி பயில்வதக்குப் பாடசாலை இல்லையென்பதையும் இங்கு பாடசாலை இருப்பது அவசியமென்பதையும் எடுத்துக் கூறி நல்லதொரு பாடசாலை கட்டப் படவேண்டுமென்பதை வற்புறுத்தினேன். இவ்விதம் ஓட்டுமடத்தில் பாடசாலையொன்று கட்டப்படும்போது இடவசதியும் தளபாட வசதியும் குறைந்திருக்கும் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலிருந்து ஆசிரியர்களையும் மாணவர்களையும் இடமாற்றம் செய்யக்கூடியதாக இருக்கும். தற்போது சைவப்பிரகாச வித்தியாசாலை அமைந்திருக்கும் இடம் நாவலர் நிலைய தர்மகர்த்தாக்களிடம் திருப்பி ஒப்படைக்கப்படவேண்டும் என்றும் நான் யோசனை கூறினேன்.

இதனால் இந்து சமய மறுமலர்ச்சிக்கு உழைத்த பெரியாரின் அபிலாஷைகளைத் தொடர்ந்து நிறைவேற்ற வழி அமையும் என்பதையும் இந்து சமயத் தத்துவங்கள், தமிழ் கலாசாரம், இசை முதலியன வளரவும் உதவுமென நான் தெரிவித்தேன் இவ்வித வளர்ச்சிக்கேற்ப தற்போது உள்ள பாடசாலைக் கட்டடம் திருத்தியமைக்கப்படலாம்.

நான் ஒரு தமிழனென்ற ரீதியில் தமிழர்களின் எதிர்காலம்பற்றி அக்கறை கொண்டுள்ளவன் என்பதையும் எமது குழந்தைகளின் கல்வி, கலாசார வளர்ச்சிக்கு என்னாலானதைச் செய்வேன் என்பதையும் உறுதியாகக் கூறவிரும்புகிறேன்.

வண்ணார்பண்ணை, நல்லூர் தொகுதியைச் சேர்ந்தவென டாக்டர் நாகநாதன் தமது கடிதத்தில் இறுதியில் குறிப்பிட்டுள்ளார்.

---

## வள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

கலவெட்டித்திடல் காந்திய சேவா சங்கத்தின் ஆதரவில் வள்ளுவர் விழா நடைபெற்றது.

திரு. கே. கே. பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், செல்வி. க. பரமேஸ்வரி, வள்ளுவர் காட்டிய இல்லறம் என்னும் விஷயம்பற்றிப் பேசினார், செல்வி. எம். கே. சரஸ்வதி 'வள்ளுவரும் தமிழும்' என்னும் விஷயம்பற்றிப் பேசினார்.

---

## பொது நூல் ...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற பரந்தநோக்கோடு நிறுவப்பட்ட பொதுஜன நூல் நிலையம், எல்லாப் பொதுமக்களுக்கும், ஓய்ந்திருக்கும் விடுமுறை நாட்களில் பூட்டியிருப்பது பொதுஜன நூலகப் பணியின் நோக்கத்திற்குக் குந்தகம் விளைவிப்பதாக இருக்கிறது. எனவே, இன்றிலிருந்து எல்லா தினங்களும் பொதுசன நூல் நிலையம் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்திருக்கவேண்டும் என்றும், இதற்கு ஆகவேண்டிய ஒழுங்குகள் உடன் கையாளப்படவேண்டும் என்றும், இச் சபை தீர்மானிக்கிறது"

திரு. சி. நாகராஜா கீழ் வரும் பிரேரணைகளை பிரேரிப்பார்:

"18 வயதுக்கு கீழானவர்களுக்கு மாநகரசபையில் எந்தப்பகுதியிலும் குறிப்பாக மலசல சுத்தி கூட்டுத்தொழில் பகுதிகளிலும் வேலை கொடுக்கப்படாது என்று இச்சபை தீர்மானிக்கிறது"

"மலசல சுத்திப் பகுதியில் வேலைசெய்யும் தொழிலாளர்கட்கு சபையின் கணக்காய் வருடாவருடம் இரண்டு சோடி காற்சட்டை மேற்சட்டை (சேட்) கொடுக்கப்பட வேண்டுமென சபை தீர்மானிக்கிறது."

---

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இடிப்பான் காண் என் வினையை ஏகம்பன் காண் எலும்பா பரணன் காண் எல்லாம் முன்னே, முடிப்பான் காண் மூவுலகுமாயினான் காண் முறைமையால் ஐம்புரியும் வழுவாவண்ணம், படித்தான் தலையறுத்த பாசுபதன் காண் பராய்த்துறையான் பழனம் பைஞ்ஞீலியான் காண், கடித்தார் கமழ்கொன்றைக் கண்ணியான் காண் காளத்தியானவனென் கண்ணுளானே.

— திருநாவுக்கரசர்.

---

## பண்டித வகுப்புக்கள்

யாழ்ப்பாணம் நாவலர் வித்தியாசாலையில் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பரீட்சைகளுக்குரிய பிரவேச, பால பண்டித, பண்டித வகுப்புக்கள் 29-3-64 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி ஒவ்வொரு சனி ஞாயிற்றுக்கிழமைகளிலும், விடுமுறை காலங்களிலும் நடைபெறும்.

இவ்வகுப்புக்களிற் சேர்ந்து கற்க விரும்புகின்றவர்கள் தலைமையாசிரியருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும். இ. திருநாவுக்கரசு, தலைமையாசிரியர். 35

---

## காணவில்லை

9-3-64 திங்கட்கிழமை மத்தியானம் பருத்தித்துறை பீலிலான் [illegible] தோல்பை (Leather Bag) தவறவிடப்பட்டது. அதற்குள் மதிப்புக்குரிய சாதனங்களுடன் மூக்குக்கண்ணாடி கேசுக்குள் பெயர் எழுதப்பட்டிருக்கிறது. கண்டெடுத்துக் கொடுக்கிறவர்களுக்கு அதன் பெறுமதி சன்மானம் வழங்கப்படும். ஆ. வீரவாகு, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. 36

---


## இழுக்காத



## சைக்கிள்?

விரைவில் சரிப்படுத்துகிறது.




3-இன்-ஒன் ஒயில் ஓர் சிறிது துளிகள் நேர்மையாக்கி விடுகிறது. செயின் சக்கிரிருக்கும் பிரேக், பெடல் ஆகியவைகளை மசகிடு செய்கிறது. கறள்கூட பிடிக்காது.

**3- இன் - ஒன் ஓயில்**

ஒழுங்கான ஒயில் ஸ்பிறே மின்சார மோட்டார்.


---


### ஏலவிற்பனை

கோப்பாய் தெற்கு கூட்டுறவு சிகறற் புகையிலை உற்பத்தியாளர் சங்கத்தில் 14-3-64 சனிக்கிழமை காலை 10 மணியளவில் (4x2) (3x2) (6x4) ஆகிய களங்களில் 1100 அடி பாலை மரங்களும் 9 முழ நீளமுள்ள 13 பனை மரங்களும் மற்றும் பாலைத் துண்டுகளும் ஏலத்தில் விற்கப்படும்.

சிவ. பாலசிங்கம்,
112 கௌரவ காரியதரிசி.

**வரி விளம்பரம்**

### லொறி என்ஜின் விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள பென்ஸ் (Benz) டீசலியும் என்ஜினும் (முழு உறுப்புகளும் அடங்கியது) விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு M M T P, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன்: 335. 34

### காணி விற்பனைக்கு உண்டு

7 1/2 பரப்பு மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு அருகாமை. விபரங்களுக்கு உரிமையாளர், 'செனிதவாச்' கொம்பனி, 56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 32

### விற்பனைக்கு வீடும் வளவும்

626/10, தலையாளி ஒழுங்கை, நாச்சிமார் கோவிலடி, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் இடத்திலுள்ள 6 பரப்பு நிலமும் வீடும் விற்பனைக்கு உண்டு விரும்புபவர்கள் ச. பொன்னையா, ஆசிரியர், சங்கத்தானை, சாவகச்சேரி என்னும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 23

### உள்நாட்டுத் தயாரிப்புகள்

உள்நாட்டுத் தயாரிப்புகள் என்பதற்காக வாங்குங்கள் என்று நாம் கூறவில்லை. வெளிநாட்டுத் தயாரிப்புகளிலும் பார்க்கச் சிறந்தவை, விலை குறைந்தவை என்பதற்காக வாங்குங்கள் என்றே கூறுகிறோம். விபரங்களுக்கு ஆங்காங்கே உள்ள பிரதிநிதிகளுடன் அல்லது எங்களுடன் கலந்துகொள்ளவும். அ. சு. பாலசுப்பிரமணியம். அனலைதீவு 1947

### தேவை

சம்பளத்துடனும் கொமிஷனுடனும் வேலை செய்யக்கூடிய கன்வசர்கள் (Canvassers) தேவை. விண்ணப்பிக்கவும்: மனேஜர், சென்மால்ஸ் தயாரிப்புகள், கோப்பாய் சந்தி, கோப்பாய். 31

வட பகுதியில்

# ஏழு கூ. மொ. வி. கிளைகள்

நல்லூர், புதன்

வட பகுதியின் பல்வேறு பகுதிகளிலும் சுமார் ஏழு கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனக் கிளைகள் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகத் தெரிகிறது. இலங்கையில் இதுவரை நிறுவப்பட்டுள்ள 93 கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனக் கிளைகளில் வட பிரதேசத்தில் மூன்று கிளைகளே நிறுவப்பட்டுள்ளன.

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனக் கிளைகளை வடபகுதியின் பல்வேறு பகுதிகளிலும் நிறுவி பொதுமக்கள் குறைந்த விலையில் பொருள்களைப் பெற்றுக்கொள்ள வசதிசெய்யும்படி ஸ்தாபனத் தலைவர் திரு. தேசபிரியா சேனநாயகாவிடம் கோரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் கிளைகளை அமைக்கத் தான் நடவடிக்கை எடுப்பதாக திரு. தேசப்பிரியா சேனநாயகா தெரிவித்துள்ளார்.

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனக் கிளைகள் அமைக்கப்படும் போது அவ்வப்பகுதியிலுள்ள படித்த வாலிபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க நடவடிக்கை எடுக்கும்படியும் திரு. சேனநாயகாவிடம் தெரிவிக்கப்பட்டது.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் நிறுவப்பட்டபின் கருவாடு, புடவை இறக்குமதிகளில் அரசாங்கத்திற்கு பெருந் தொகையான இலாபம் கிடைத்துள்ளதாகவும், நாளடைவில் இறக்குமதி வர்த்தகத்தை கூ. மொ. வி. ஸ்தாபனமே பொறுப்பேற்கக்கூடிய சூழ்நிலை உருவாகிவருவதாகவும் அறியப்படுகின்றது.

---

## இலங்கைக்கு சீனி

கொழும்பு, செவ்வாய்

இவ் வாரத்தில் மூவாயிரத் தொகுமதிகமான தொன் சீனி இலங்கை வந்துசேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பொது நூல் நிலையம் தினமும் திறந்திருக்க வேண்டும்

## மாநகரசபைக்கு வரும் தீர்மானம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் 1964-ம் ஆண்டு மார்ச் மாதப் பொதுக்கூட்டம் வருகிற 13-ந் திகதி நடைபெற இருக்கிறது. அப்போது திரு. அ. க. துரையப்பா கீழ்க்காணும் பிரேரணைகளைப் பிரேரிப்பார்.

"காதார மராமத்து மேற்பார்வையாளர்களையும், மற்றும் அவற்றை ஒத்த பதவிகளை வகிப்போரையும், அவர்கள் நிரந்தர சேவையில் ஐந்து வருடங்களுக்கு மேற்பட கடமையாற்றியிருப்பின் அவர்களை உள்ளூராட்சிச் சேவையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று இச்சபை உள்ளூராட்சி அதிகாரசபையைக் கேட்டுக்கொள்ளுவதென்று தீர்மானிக்கிறது".

"தெருக்கள், ஒழுங்கைகளில் காணும் ஓட்டை உடைசல்களை திருத்துவதற்கென 1964-ம் வருட பிரதான வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையான ரூ 10,000/-ம் துப்புரவாகப் பற்றாதிருப்பதனாலும், ஒவ்வொரு தெருவினதும் சீர்கெட்ட நிலையை இட்டு பொதுமக்களும், குறிப்பாக மோட்டார் ஓட்டிகளும், சைக்கிள் பாவிப்போரும் தினமும் முறைப்பாடு தெரிவித்து வருவதாலும், அடுத்த உப வரவு-செலவுத் திட்டத்தில் குறைந்தபட்சம் ரூ. 25,000/- ஒதுக்குவதென்றும், தெருக்களைத் திருத்தும் வேலையை உடனடியாக ஆரம்பிப்பதென்றும் இச்சபை தீர்மானிக்கிறது."

திரு த. சுந்தையா கீழ்வரும் பிரேரணைகளைப் பிரேரிப்பார்:-

"அரசாங்க வைத்தியசாலைகளில் போதிய மருந்துகள் இல்லாமல் தொடர்ச்சியாகப் பல வருடங்களாக தமிழ்ப் பகுதிகள் புறக்கணிக்கப்பட்டதினால் விசர்நாய்க்கடி, ஏற்பு வலி, சத்திரசிகிச்சை மயக்க மருந்து, ஊசி முதலியவைகள் இல்லாத காரணத்தினால் பெருந்தொகையான பொது மக்கள் உயிரிழந்துள்ளார்கள். அத்துடன் தமிழ் பகுதிகளிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள அரசாங்க வைத்தியசாலையில் இடநெருக்கடி இருப்பதினாலும் ஏழை மக்களுடைய வசதியை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகர சபை வட்டாரங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ஆயுள்வேதவைத்தியசாலை உடனடியாகதிறக்கவேண்டுமென்று இச் சபை தீர்மானிக்கிறது"

"அத்தியாவசிய தேவையை முன்னிட்டு எல்லா வட்டாரங்களிலுமுள்ள பிரசவவிடுதிகளுக்கு தொலைபேசி இணைப்பு செய்ய வேண்டும் என்று இச்சபை தீர்மானிக்கிறது."

"அரசியல், பொருளாதார, சமூக, விஞ்ஞான விஷயங்களில் பொதுமக்கள் தங்கள் ஓய்வு நேரத்தைச் செலவிட்டுப் பயனடைய வேண்டும்

(5-ம் பக்கம் பார்க்க)

# நாவலரின் அணிகலன்கள்

## யாழ்நகரில் காட்சிக்கு வைக்கப்படும்

நல்லூர், புதன்

சுமார் ஒரு நூற்றாண்டு காலத்திற்கு முந்தியதாகக் கருதப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் உபயோகித்த உருத்திராட்சமாலை, வஸ்திரம் என்பனவாக உள்ள புனித சின்னங்களைத் தரிசிக்கும் வாய்ப்பு யாழ்ப்பாணத்து மக்களுக்கு சனிக்கிழமை கிடைக்கவிருக்கின்றது. இதற்கான ஏற்பாடுகளை அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம் செய்துள்ளது.

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம் வருகிற சனிக்கிழமை வண்ணார்பண்ணை அரசடி விநாயகராலய மண்டபத்தில் தமிழர் திருநாளைக் கொண்டாடவிருக்கின்றது. அன்று மாலை கைலாசபிள்ளையார் கோவிலடியிலிருந்து புறப்படும் ஊர்வலம் திருமதி முத்துக்குமாரு அம்மையார் இல்லத்தில் நாவலர் பெருமானின் புனித சின்னங்களை தரிசித்து ஆனைப்பந்தி, ஆரியகுளம், சிறுப்பிடிச் சந்தி, பெருமாள் கோவில் வீதி வழியாக அரசடி விநாயகர் ஆலயத்தை வந்தடையும்.

உரையரங்கு, கவியரங்கு, இசையரங்கு நிகழ்ச்சிகளில் அறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் ஆகியோர் கலந்து கொள்வர்.



வெற்றிகரமான 2-வதுவாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (சண்டி) விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் 3 திரைகளில்

சிவாஜி கணேசன் — விஜயகுமாரி
முத்துராமன் — சௌகார் ஜானகி

மற்றும் பலர் நடிக்கும்



பார் மகளே பார்

பணம், அந்தஸ்து, மதிப்பு இவைதான் வாழ்க்கையின் உயிர்நாடி என்று கருதும் ஜமீன்தாராக நடிகர்திலகமும் அவரது இரு புதல்விகளாக புஷ்பலதாவும் விஜயகுமாரியும் தோன்றுகிறார்கள்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

காங்கேசன்துறை பட்டினசபை

# விசேஷ கூட்டத்திலிருந்து 2 அங்கத்தினர்கள் வெளிநடப்பு

## சகல தீர்மானங்களும் நிறைவேறின

மாவிட்டபுரம், செவ்

காங்கேசன் துறைப் பட்டின சபையின் விசேடக் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு சபைத்தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் தலைமையில் நடைபெற்றது. சென்ற மாதம் 8-ம் திகதி நடைபெற்ற விசேடக் கூட்டமும், 19-ம் திகதி நடைபெற்ற மாதாந்தக் கூட்டமும் சரியான முறையில் கூட்டப்படவில்லை என்று கருதப்பட்டதால் அக்கூட்டங்களில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளை மீண்டும் ஆராய்வதற்காகவே இக்கூட்டம் கூட்டப்பட்டது.

தலைவர் நிகழ்ச்சி நிரலை வாசித்ததும் உபதலைவர் திரு. க. கிருபாமூர்த்தி பின்வருமாறு கூறினர்.

"முன் இரு கூட்டங்களும் கூட்டப்பட்டபோது நாங்கள் கிளப்பிய சட்டப் பிரச்னைகளை நிராகரித்து கூட்டம் நடத்திய தலைவர்; மீண்டும் இக்கூட்டத்தை கூட்டியுள்ளதால் நாங்கள் முன்னர் கிளப்பிய சட்டப் பிரச்னைகளை அவர் ஏற்றுள்ளார் எனத் தெரிகிறது. அதற்காக நான் தலைவருக்கு நன்றி கூறுகிறேன். அரசிலைப் பாராமல் தலைவர் சட்டப்படி கூட்டங்களை கூட்டவேண்டும். இன்று கூட்டியுள்ள கூட்டமும் சட்டத்திற்குட்பட்டதல்ல."

டாக்டர் சீனிவாசகம் பேசுகையில் முன்னர் நடைபெற்ற இரு கூட்டங்களும், செல்லுபடியாகாதென தலைவரோ, சபையோ, நீதிமன்றங்களோ தீர்மானிக்கவில்லையென்றும் அந்நிலையில் இக்கூட்டம் கூட்டப்பட்டது சட்டத்திற்கு விரோதமானது என்றும் கூறினர்.

திரு. சிவனடியார் பேசுகையில் முன்னர் நடைபெற்ற இரு கூட்டங்களும் சட்டத்திற்குட்பட்டதாகத் தான் கருதுவதாகவும், சிலர் இக்கூட்டம் பற்றி வீண் தம்பட்டம் அடிப்பதாகவும் கூறினர். இதனை 6-ம் வட்டார அங்கத்தவர் வி. இரத்தினராசா ஆதரித்தார்.

தலைவர் வாதப்பிரதிவாதங்களுக்குப் பதிலளிக்கையில் சபையில் கிளப்பப்பட்ட சட்டப் பிரச்னைகளை தாம் நிராகரிப்பதாகவும், முன்னர் நடைபெற்ற கூட்டங்கள் செல்லுபடியாகும் என்றும் கூறினர்.

இந்நிலையில் உபதலைவர் திரு. க. கிருபாமூர்த்தியும், டாக்டர் சீனிவாசகமும் முன்னர் நடைபெற்ற கூட்டங்கள் சரியென்றால் ஏன் இக்கூட்டம் நடப்பானேன்? என்று கூறிக்கொண்டு கூட்டத்தை விட்டு வெளியேறினர்கள். இதன்பின் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றபோது கொண்டுவரப்பட்ட ஒரு சில பிரேரணைகள் திருத்தங்களுடனும் மற்றவைகள் திருத்தமின்றியும் ஏகமனதாக ஏற்கப்பட்டன.

சபையின் வாசிகசாலை பற்றிய பிரேரணை கொண்டுவரப்பட்டபோது 5-ம் வட்டார அங்கத்தவர் திரு. சிவனடியார் வாசிகசாலைக் கட்டிடம் சாத்திர முறைப்படி அமையவில்லை என்று தாம் கருதுவதாகவும் அதனால் தான் சபையில் இத்தொல்லைகள் நடப்பதாக தாம் நம்புவதாகவும் வாசிகசாலையை சபையின் வளவில் பிரித்து அதற்கென எல்லை வகுக்கும் படியும் கேட்டார்.

# சைவசமய அதிபர்கள் நியமிக்கப்படவேண்டும்

## அரசாங்கத்துக்கு சைவ பரிபாலனசபை கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்

"தமிழ்மக்கள் மத்தியில் சைவாபிமானம் குன்றிக்கொண்டு வருகின்றது. தமிழ்மக்களின் உரிமைகளும் பறிக்கப்பட்டு வருகின்றன. பறிக்கப்படும் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதில் சைவ பரிபாலன சபை சகல முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்" என்று முதலியார் திரு. வி. முத்துத்தம்பி சைவ பரிபாலன சபையின் 75-வது வருடக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

சைவபரிபாலன சபையின் வருடாந்தக் கூட்டம் முடிக்குரிய நியாயவாதி திரு. த. முத்துசாமிப்பிள்ளை தலைமையில் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் கல்வி பயிலும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் சைவர்கள். எனவே இந்த இரு பாடசாலைகளிலும் சைவசமய அதிபர்களையே நியமிக்கும்படி இச்சபை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறது.

கலஞ்சென்ற டாக்டர் பி. எஸ்ஸின் மறைவு குறித்து அனுதாபத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

---

கொழும்பு, செவ்.

உணவு அமைச்சக காரியாலயத்துக்கென 16 மாடிகள் கொண்ட கட்டடமொன்றைக் கட்ட அமைச்சு திட்டமிட்டுள்ளது. இதற்கென ரூ 65 லட்சம் அரசாங்கத்திடம் கோரப்பட்டுள்ளது.

## என்ஜின் சாரதி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிட்டிருந்தன. எனக்குத் தெரிந்த விவரத்தின்படி, அங்கிருக்கும் மூன்று அடையாளங்களில், சிலாபம் கடுகெதி புகையிரதத்திற்கு, அவற்றுள் இரு பச்சை வெளிச்சம் காட்டப்படவேண்டும். மூன்றாவது அறிவிப்பில்தான் சாரதி புகையிரதத்தை நிறுத்தவேண்டும். கடுகெதிப் புகையிரதங்களை திடீரென நிறுத்தமுடியாது. சம்பவம் நடைபெற்றசமயம் புகையிரத ஜெனரல் மனேஜர் ரம்பாலாவும், கட்டுப்பாட்டு அறையில் இருந்ததாக நான் அறிகிறேன். இதுசம்பந்தமாக ஒரு விசாரணை நடத்தும்படி கேட்டுக்கொள்கிறேன் என்றும் அவர் கூறினர்.

## மரண அறிவித்தல்

### பார்வதிப்பிள்ளை

நீர்வேலி மத்தி பூ. சின்னத்துரை ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியரின் பாரியாரும், ஆசிரியர் கு. சண்முகநாதன், திருமதி சரவணமுத்து அன்னப்பிள்ளை அவர்களின் அருமைச் சகோதரியும், பிலியந்தலை மத்திய கல்லூரி ஆசிரியர் துரைராசா, அரசாங்க வேலைப்பகுதி உதவிப் பொறியியலாளர் சுப்பிரமணியம் ஆகியோரின் சிறிய தாயாருமான பார்வதிப்பிள்ளை அவர்கள் செவ்வாய்க்கிழமை (10-3-64) காலை 9 மணியளவில் இறைவனடியடைந்தார். ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் நீர்வேலியில் நடைபெறும் 37